# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## BBA / COM 28 (I) – COST AND MANAGEMENT ACCOUNTING – I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) ABC ஆய்விலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? அதன் நன்மைகள் யாவை?

(03 புள்ளிகள்)

(ஆ) மூலப் பொருள் விநியோக விலையிடும் முறைகளில் LIFO , FIFO ஆகியவற்றில் எது சிறந்தது என நீர் கருதுகிறீர்? ஏன்?

(03 புள்ளிகள்)

(இ) ABC Ltd ஆனது கீழ்வரும் மூலப்பொருள் கட்டளையின் போது கழிவுத் தொகையினைப் பெறுகின்றது.

| விலை Kg க்கு (ரூபா) | Kg |
|---|---|
| 1200 | 500 க்கு கீழ் |
| 1180 | 500 வும் 1000 க்கு கீழ் |
| 1160 | 1000 வும் 2000 க்கு கீழ் |
| 1140 | 2000 வும் 3000 க்கு கீழ் |
| 1120 | 3000 வும் அதற்கு மேல் |

ஆண்டுக்கான மூலப்பொருள் தேவை 5000 Kgs ஆகும். ஒரு கட்டளைக்கான கிரயம் ரூபா 1200 ஆகவும் ஆண்டுக்கான மூலப்பொருள் இருப்பு வைத்தல் கிரயம் 20% ஆகவும் காணப்படுகிறது.

**நீர் தயாரிக்க வேண்டியது :**

(i) அதிகபட்ச சிக்கன கொள்வனவு மட்டத்தினை கணிக்குக.

(ii) ஒரு Kg க்கான விலை ரூபா. 1500 ஆகவும் கழிவுத் தொகை காணப்படாத விடத்தும் மேல் வினாவுக்கான உமது விடை எவ்வாறு அமையும்?

(14 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) ஒரு நல்ல கூலி முறைமையில் காணப்படும் அத்தியாவசிய பண்புகள் யாவை?

(02 புள்ளிகள்)

(b) பின்வரும் கூலிக் கொடுப்பனவு முறைகளை விளக்குக.

(i) Taylor ன் வேறுபடுத்தப்பட்ட துண்டு வீத முறைமை (Taylor's Different piece Rate system)

(ii) Emerson's வினைத்திறமைத் திட்டம் (Emerson's efficiency plan)

(04 புள்ளிகள்)

(c) A , B எனும் இரண்டு ஊழியர்கள் ஒரே வகையான சாதாரண கூலி வீதத்தில் ஒரே வகையான மூலப்பொருளைப் பயன்படுத்தும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மிகையூதியம் A க்கு Rowan திட்டத்திலும் B க்கு Halsey திட்டத்திலும் வழங்கப்படுகின்றது. உற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட வேலை நேரம் 100 மணித்தியாலங்கள். இதில் A உற்பத்தியினை மேற்கொள்வதற்கு 60 மணித்தியாலங்களினையும் B 80 மணித்தியலங்களினையும் எடுத்தனர். தொழிற்சாலை மேந்தலை வீதமானது உண்மையாக வேலை செய்த ஊழிய மணிக்கு ரூபா 10 ஆக அமைந்தது. A க்கு ரூபா 7280 வும், B க்கு ரூபா 7600 வும் தொழிற்சாலை உற்பத்தி கிரயம் ஏற்பட்டுள்ளது.

**நீர் தயாரிக்க வேண்டியது :**

(i) சாதாரண கூலி வீதத்தினைக் கணிக்குக.

(ii) மூலப் பொருள் கிரயத்தினைக் கணிக்குக

(iii) இரண்டு ஊழியர்களினதும் மிகையூதியத்தினைக் கணிக்குக.

(14 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) 'Activity based costing' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(03 புள்ளிகள்)

(ஆ) மேந்தலையில் 'ஒதுக்கல்' (allocation), 'பகிர்வு' (apportionment), 'உறிஞ்சல்' (absorption) ஆகியவற்றினை வேறுபடுத்துக.
(03 புள்ளிகள்)

(இ) உமக்கு தரப்பட்டுள்ள பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி, சேவைத் திணைக்களங்களின் மேந்தலைகள் உற்பத்தி திணைக்களங்களுக்கு ஒருங்கமை சமன்பாட்டு முறையில் மாற்றப்படுவதன் மூலம் A, B, C எனும் உற்பத்தி திணைக்களங்களுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தினைக் கணிக்கும் படி வேண்டப்படுகின்றீர்.

| | | உற்பத்தித் திணைக்களம் | | | சேவை திணைக்களம் | |
|---|---|---|---|---|---|---|
| விபரம் | மொத்தம் | A | B | C | P | Q |
| மொத்த மேந்தலைகள் | 46,000 | 11,310 | 13,050 | 8,040 | 7,500 | 6,100 |
| வேலை செய்த மணித்தியாலம் | - | 5,000 | 4,000 | 3,000 | - | - |
| P சேவையின் பகிர்ந்தளிப்பு % | | 30% | 40% | 20% | - | 10% |
| Q சேவையின் பகிர்ந்தளிப்பு % | | 15% | 25% | 40% | 20% | - |

(14 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) 'அசாதாரண இலாபம்' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(02 புள்ளிகள்)

(ஆ) சாதாரண, அசாதாரண செய்முறை நட்டங்களினை அதற்கான காரணங்களுடன் விபரிக்குக.
(02 புள்ளிகள்)

(இ) பின்வரும் தகவல்கள் ஏப்ரல் மாத உற்பத்தி அலகுகளுடன் தொடர்புபட்டவையாகும்.

ஆரம்ப நடைமுறை வேலை 900 அலகுகள் ரூபா. 4500
முடிவடைந்த விதம் : மூலப்பொருள் 100%
கூலியும், மேந்தலையும் - 60%

மூலப்பொருள் உள்ளீடு 9100 அலகுகள் ரூபா. 27300

செலவீனம் : கூலி – ரூபா. 12300

மேந்தலைகள் ரூபா. 8200

சேதமடைந்த அலகுகள் – 1200 அலகுகள்

இதன் முடிவடைந்த வீதம் : மூலப்பொருள் – 100%

கூலியும் மேந்தலையும் – 70%

இறுதி நடைமுறை வேலை – 1000 அலகுகள்

இதன் முடிவடைந்த வீதம் : மூலப்பொருள் – 100%

கூலியும் மேந்தலையும் - 80%

அடுத்த செய்முறைக்கு மாற்றப்பட்ட முடிவுப் பொருள்கள் 7800

இயல்பான நட்டம் உள்ளீட்டில் – 10%

கழிக்கப்பட்ட பொருள் விற்பனை விலை அலகுக்கு ரூபா 3

நீர் பின்வருவனவற்றை FIFO முறையினைப் பயன்படுத்தி தயாரிக்குக.

- சம அலகுக் கூற்று
- கிரயக் கூற்று
- பெறுமதிக் கூற்று
- செய்முறைக் கணக்கு

(16 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) P/V வீதம் என்றால் என்ன? அதன் பயன்பாட்டினை விளக்குக.

(02 புள்ளிகள்)

(ஆ) பின்வருவன சமப்பாட்டு புள்ளி (Break – even point) இலாப அளவு வீதம் (Profit volume ratio) ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தினை சுருக்கமாக விபரிக்குக.

(i) மாறும் கிரயத்தில் குறைவு

(ii) மொத்த நிலையான கிரய அதிகரிப்பு

(iii) உற்பத்திப் பொருளின் விலை அதிகரிப்பு

(iv) விற்பனை தொகை அதிகரிப்பு

(04 புள்ளிகள்)

(இ) MN Ltd ன் இரண்டு வருடங்களுக்கான வியாபாரத்தின் முடிவுகள் வருமாறு :

| **வருடம்** | **விற்பனைகள் (ரூபா)** | **இலாபம் (ரூபா)** |
|---|---|---|
| 2006 | 540,000 | 12,000 |
| 2007 | 600,000 | 30,000 |

**பின்வருவனவற்றைக் கணிக்குக :**

(i) P/V வீதம்

(ii) நிலையான கிரயம்

(iii) சமப்பாட்டுப் புள்ளியில் விற்பனை பெறுமதி

(iv) இலாபம் ரூபா. 48,000 ஆயின் பாதுகாப்பு எல்லை

(v) இரண்டு வருட காலத்திற்குமான மாறும் கிரயங்கள்.

(14 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****